## DEPOSITION OF WITNESS

## IN THE COURT OF District Munsif Cum Judicial Magistrate Court, Shencottai

OS No. 51/2020

Deposition of witness for பி.வா.சா.1

Name and Age : **சிவசந்திரன்**

Father's/Husband Name :
Village and Taluk :
Caste and Religion
:
Calling :
Solemnly affirmed in accordance with the provisions of oaths Act 1969 (Central Act 44 of 1969) on the day of (06.11.2025)

வாதி தரப்பில் குறுக்குவிசாரணை

நான் பன்னிரண்டாம் வகுப்பு வரை படித்துள்ளேன். இந்த வழக்கில் 1ம் பிரதிவாதி சிவசுப்பிரமணியன் எனது பெரியப்பா. இரண்டாம் பிரதிவாதி சாமிநாதன் எனது தகப்பனார். மூன்றாம் பிரதிவாதி எனது பெரியப்பா. வழக்கு தாக்கல் செய்துள்ள வாதி எனது பெரியப்பா பையன் என்றால் சரிதான். இந்த வழக்கில் எனது தகப்பனார் தவறிய பின்பு நான் எனது தகப்பனார் தாக்கல் செய்த எதிர் வழக்குரையோ, எனது பெரியப்பா தாக்கல் செய்த எதிர் வழக்குரையோ தழுவுகிறேன் என்று எந்த குறிப்பாணையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நானும் தனிப்பட்ட முறையில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் சொல்லப்பட்டுள்ள உறவு முறைகளும், சொத்தில் வழிமுறைகளும் அவை அனுபவிக்கப்பட்டு வரும் விவரமும் உண்மைதான் சரிதான். எனது வீடு, எனது பெரியப்பா வீடு அருகருகே உள்ளது என்றால் சரிதான். அதற்கு தொட்டு எந்த பக்கம் முற்றம் உள்ளது என்றால் வடபக்கம் உள்ளது. அந்த வட பக்கத்தை தொட்டு அதற்கு அடுத்த வடபக்கம் யாரிடம் உள்ளது என்றால் அதில் தற்போது வாதி வீடு கட்டி இருக்கிறார். வாதி வீடு கட்டி இருக்கக்கூடிய வீட்டிற்கு கீழ் பக்கம் என்ன உள்ளது என்றால் நடை பாதை உள்ளது.

இதற்கு முன்பு எனது தகப்பனாரும், பெரியப்பாவும் வாதியாகவும், இந்த வழக்கு மூன்றாம் பிரதிவாதியாகவும் அ.வ.எண்.48/2006 அன்று வழக்கு தாக்கல் செய்யப்பட்டது தெரியுமா

என்றால் தெரியும். அந்த வழக்கில் எனது தகப்பனார் இந்த வழக்கில் குறிப்பிட்டுள்ள நாலாவது அயிட்ட சொத்தையும், மூணாவது அயிட்டத்தையும் பிரிவினை செய்யப்படவில்லை. அதில் மூன்றாம் பிரதிவாதி அத்துமீறி கட்டிடம் கட்டுவதாக தான் வழக்கு தாக்கல் செய்தார் என்றால் சரிதான். எனது அப்பா, பெரியப்பா இருக்கக்கூடிய காலகட்டத்தில் கிழமேல் முற்றத்தை நடைபாதையும், பொதுவாக அனுபவம் செய்து வந்தார்கள் என்றால் இல்லை. சொத்துக்கள் பிரிக்கப்படவில்லை. சொத்துக்கள் பிரிக்கப்பட்டதாக எனது சாட்சிய வாக்குமூலத்தில் சொல்லி இருந்தால் அது உண்மை இல்லை என்றால் சரியல்ல. அ.வ.எண். 48/2006 வழக்கானது என்று எனக்கு தெரியாது என்றால் தள்ளுபடி செய்யப்பட்டது. அந்த வழக்கில் ஆணையர் நியமனம் செய்யப்பட்டு தாவா இடத்தை பார்வையிட்டு அறிக்கை, வரைபடம் தாக்கல் செய்துள்ளார் என்றால் அந்த விவரம் எனக்கு தெரியாது. அந்த அறிக்கையில் இந்த வழக்கு முற்றமும், நடைபாதையும் பொதுவானது என்று சொல்லி உள்ளார் என்றால் அது எனக்கு தெரியாது.

வாதி சென்னையில் ஒரு தனியார் நிறுவனத்தில் வேலை பார்க்கிறார் என்றால் சரிதான். OS No.48/2006 வழக்கு நடைபெறும் பொழுது எனது பெரியப்பா ராமநாதன் மண்டகப்படி தெருவில் தனியாக வாடகை வீட்டில் தான் குடியிருந்து வந்தார் என்றால் சரிதான். வாதி சென்னையில் இருப்பதால் தற்போது வீடு கட்டுவதை அவரது தகப்பனார் தான் மேற்பார்வை பார்த்து வந்தார் என்றால் சரிதான். வீட்டிற்கு வடபக்கம் உள்ள முற்றத்திலிருந்து 4 அடிக்கு மேல தான் எனது வீடு உள்ளது என்றால் இல்லை. இந்த வழக்கில் ஆணையர் தாவா இடத்தை வந்து பார்த்தால் அந்த விவரம் தெரியுமா என்றால் தெரியாது. அந்த ஆணையர் அறிக்கையில் என்ன சொல்லப்பட்டுள்ளது என்று விவரமும் எனக்கு தெரியாது. வழக்கு என்ன பரிகாரத்திற்காக திருமலை குமார் போட்டுள்ளார் என்று விவரம் தெரியுமா என்றால் அதாவது 3 வது, 4 வது தபசில் சொத்தில் பொது உரிமை இருப்பதாக தாக்கல் செய்துள்ளார். எனது பாட்டியின் பெயர் உப்பச்சி அம்மாள், அவர் எந்த வருடம் இறந்தார் என்றால் தேதி ஞாபகம் இல்லை. இந்த வழக்கில் ஆஜரான பின்பு ஆணையர் அறிக்கைக்கு எந்த ஆட்சேபனையும் தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். மூன்றாம் பிரதிவாதி வீடு உள்ளது சம்பந்தமாக நானும், எனது தகப்பனாரோ ஆய்க்குடி பஞ்சாயத்தில் எழுத்து மூலமாக புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான்.

நான் தாக்கல் செய்த நிரூபண வாக்குமூலத்தில் 12 வது பாராவில் எனது நெருங்கிய உறவினர் இறந்து போய்விட்டார் அந்த மாதிரி உறவினர் வீட்டிற்கு வந்த நேரத்தில் நாங்கள்

எல்லோரும் சமாதானமாக பேசி ஒரு முடிவுக்கு வந்ததாக சொல்லி உள்ளதில் அது சம்பந்தமாக எழுத்து மூலமாக எந்த விதமான ஆதாரமும் இல்லை என்றால் சரிதான். யார் இறந்து போனார் என்று நிரூபண வாக்குமூலத்தில் சொல்லவில்லை. இறப்பு சான்றிதழும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது தாத்தா பாட்டிக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை எனது தகப்பனாரும், பெரியப்பாக்களும் வாய்மொழியாக பிரித்துக் கொண்டு அந்த சொத்துக்களை அவரவர் வில்லங்கம் செய்துவிட்டார்கள் என்றால் சரிதான். அந்த வில்லங்கங்கள் செய்து சுமார் எத்தனை வருடம் இருக்கும் என்றால் எனக்கு தெரியாது. எனது எதிர் வழக்குரையில் 1920 வது வருடம் புரட்டாசி மாதம் 25 ஆம் தேதி ஏற்படுத்திக் கொண்ட பாக உடன்படிக்கையின் படி உள்ள சொத்துக்களில் இந்த வழக்குரை சொத்துக்களை தவிர, இதர சொத்துக்களும் உள்ளது என்றால் சரிதான். அந்த சொத்துக்களை சகோதரர்கள் பிரித்து வில்லங்கம் செய்துவிட்டார்கள் என்றால் சரிதான்.

வாதி வீட்டிற்கு பின்புறம் பொது முற்றத்தை நோக்கி வாசல் உள்ளது என்றால் சரிதான். அந்த வாசலுக்கு இறங்கி வருவதற்காக படிக்கட்டு உள்ளது என்றால் ஒரு படி வைத்துள்ளார்கள். தற்போது அந்த படிக்கட்டு இல்லை என்றால் மூடிவிட்டார்கள். அந்த படிக்கட்டை மூடியது எனது பெரியப்பா என்றால் இல்லை. அவர்களே மூடிக் கொண்டார்கள். வாதி வீட்டை தொட்டு மேல்புறம் சரவணன் வீடு உள்ளதா என்றால் சரிதான். அவரது வீட்டில் வாசல்விடப்பட்டு படிக்கட்டு முற்றத்தை தொட்டு உள்ளது என்றால் சரிதான். எனது தகப்பனார் வீட்டிற்கு மேல் பக்கம் ஆறுமுகம் வீடு உள்ளது என்றால் சரிதான். அவரது வீடும் வடக்கு பார்த்த வாசல் உள்ள வீடு என்றால் சரிதான். ஆறுமுகமும், சரவணனும் அண்ணன் தம்பி என்றால் சரிதான். வாதி வீட்டிற்கு அடுத்து மண்டக படி உள்ளது என்றால் சரிதான். நான் சாட்சிய நிரூபண உறுதி கூற்றில் கூறியுள்ளவாறு எங்கள் உறவினர் வீட்டில் எந்தவித பஞ்சாயத்தும் நடைபெறவில்லை என்றாலும் சரியல்ல. எனது பாட்டி இறந்ததற்கு விசேஷம் நடந்தது. அது எத்தனை நாள் நடந்தது என்றால் 9 நாள் நடந்தது. எனது பெரியப்பாவும், அப்பாவும் சொத்துக்களை பிரித்து தர வேண்டும் என்று மூன்றாம் பிரதிவாதிக்கோ, வாதிக்கோ எந்தவித அறிவிப்பும் அனுப்பவில்லை என்றால் சரிதான். எனது அப்பாவும், பெரியப்பாவும் தாக்கல் செய்த வழக்கு தள்ளுபடி ஆனதில் நான் எந்தவித மேல் நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான்.

எனது உறுதிகூற்று 13 வது பாராவில் வாதிகள் கழிவு நீர் விடுவதால் துர்நாற்றம் ஏற்படுவதாக சொல்லியுள்ளது அது சம்பந்தமாக ஆய்குடி பஞ்சாயத்தில் எழுத்து மூலமாக புகார்

எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். எனது அப்பாவும், பெரியப்பாவும் உயிருடன் இருந்தபோது மூன்றாம் பிரதிவாதி பிரிக்கப்படாத சொத்தில் வீடு கட்டுகிறார் என்று பஞ்சாயத்தில் ஆட்சேபணை எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். பஞ்சாயத்தில் இருந்து கழிவு நீர் உள்ளதாக சொல்லக்கூடிய இடத்தை பார்வையிடவும் இல்லை என்றால் எனக்கு தெரியாது. ஆணையர் அறிக்கையில் நான் உறுதிகூற்றில் கூறியுள்ளவாறு கழிவு நீர் இருப்பதாக சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல. நான் அளித்த சாட்சியத்தில் உண்மை இல்லை. வாதி வரைபடத்தில் குறிப்பிட்டுள்ள மூன்றாவது இலக்க சொத்தையும், நாலாவது இலக்க சொத்தையும் பொதுவாக தான் அனுபவித்து வரப்படுவதாகவும், எனது அப்பாவும், பெரியப்பாவும் தான் வாதிக்கு அந்த இடத்தை கொடுக்கக் கூடாது என்று முற்றத்தை அடைத்தும், நடைபாதையை அடைத்து இடைஞ்சல் செய்தார்கள் என்றால் சரியல்ல. அதனால் தான் வாதி இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. அதனால் வாதி கேட்டுள்ள பரிகாரம் கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல.

Taken down by me / before me in Open court, interpreted/ read over to the witness, and admitted by the deponent to be correct.

S ILAIYARAJA

Digitally signed by S ILAIYARAJA
Date: 2025.11.06 16:54:55 +0530

District Munsif cum Judicial Magistrate,
Shenkottai